# தமிழ்மொழியும் இலக்கியமும்

## தரம் 10 ஒப்படை

### 01. சுருக்கமான விடை தருக

1. சிந்தாமணி என்ற மகுடவாசகம் தாங்கிய தமிழ் நூல்கள் நான்கு தருக.
2. “தண்டாமரையுடன்…” எனத் தொடங்கும் விவேக சிந்தாமணிப் பாடலில் வெளிப்படும் முக்கிய கருத்து யாது?
3. இப்பாடலில் எடுத்தாளப்பட்டுள்ள உவமையணிகளைத் தருக.
4. வெற்றிவேற்கை எனப் பெயர் வரக் காரணம் யாது?
5. “தேம்படுபனையின்……” எனத் தொடங்கும் வெற்றிவேற்கைப் பாடலில் வெளிப்படும் முக்கிய கருத்து யாது?
6. இப்பாடலின் முக்கிய கருத்து எவ்வாறு விளங்கப்படுத்தப்பட்டுள்ளது?
7. “அடக்கமுடையார்…..” எனத் தொடங்கும் வாக்குண்டாம் பாடலில் வெளிப்படும் முக்கிய கருத்து யாது?
8. இப்பாடலில் கையாளப்பட்டுள்ள உவமையணிகளை தருக
9. “கணக்காயரில்லாத….” எனத் தொடங்கும் பாடலில் வெளிப்படும் பயன்தராத மூன்று விடயங்களும் எவை?
10. “திரிகடுகம்” என்ற பெயர் வரக் காரணம் யாது?
11. “முதுமொழி” வெண்பா என்ற பெயர் வரக் காரணம் யாது?
12. “உப்பில்லாக் கற்சிலை……” எனத் தொடங்கும் முதுமொழி வெண்பா பாடலில் வெளிப்படும் முக்கிய கருத்து யாது?
13. இப் பாடலில் கையாளப்பட்டுள்ள முதுமொழிகளையும் அதற்கு நிகரான இரண்டு வேறு பழமொழிகளையும் தருக.
14. அறம் பொருள் இன்பம் பற்றி எடுத்துரைக்கும் இரு அறநூல்களைத் தருக.
15. “யானை அனையவர்……” எனத் தொடங்கும் பாடலில் வெளிப்படும் முக்கிய கருத்தினைத் தருக.
16. இப் பாடலில் எடுத்தாளப்பட்டுள்ள உவமையணிகளைத் தருக.
17. “கற்றார் முன்…….” எனத் தொடங்கும் பாடலில் வெளிப்படும் இனிதான செயல்களைத் தருக.
18. பண்டிதமணி கணபதிப்பிள்ளை படைத்த இலக்கியங்கள் எவையேனும் இரண்டு தருக.
19. விவாதம் செய்ய எழுந்த நாவலரின் தோற்றப் பொலிவைத் தருக.
20. நாவலர் அவர்களது நேர்மை பற்றிக் கூறுக.
21. நாவலர் அவர்களது திறமை பற்றிக் கூறுக.

22. பாரதி தனது காதலி மீது கொண்ட அதீத காதல் வெளிப்படும் இடங்கள் எவை?
23. பாரதி தனது புலன்கள் யாவும் அழிந்து எப்போது புத்துயிர் அடைவதாகக் கூறுகிறார்?
24. ஒருவன் தான் விரும்பியதை அடைய எவ்வாறு முயற்சிக்க வேண்டும்?
25. மனிதன் தான் விரும்பியதை அடைய எவ்வாறு முயற்சிக்க வேண்டும்?

02. பின்வரும் வாக்கியங்களின் எழுவாயினை இனம் காண்க.

1. கிடைத்தாற் கிடைக்கட்டும்
2. அண்டத்தில் ஆயிரம் கோடி சூரியர் உண்டு என்பர்
3. சிறுகக்கட்டி பெருகவாழ்
4. உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்யலாமா?
5. உண்மை சொன்னால் நல்லவன்.

03. பின்வரும் வாக்கியங்களின் பயனிலையை இனம் காண்க.

1. கற்றார்க்கு மூன்று கண்
2. மகனுக்கு நல்ல காய்ச்சல்
3. நல்ல மாட்டிற்கு ஒரு சூடு
4. கிட்ட இருந்தால் முட்டப்பகை
5. அவனுக்கு வாயிலே பொய்

04. பின்வரும் சொற்களைப் பிரித்து எழுதுக.

1. சேவடி
2. பன்னாள்
3. பண்டைக்காலம்
4. தொள்ளாயிரம்
5. முட்டாள்
6. பதாம்புயம்
7. மகேசன்
8. கானகம்
9. பன்னயம்
10. மீடிறன்

05. பின்வரும் வழுவான வாக்கியங்களைத் திருத்தி வழுவற்ற வாக்கியங்களாக மீண்டும் எழுதுக.

1. சோலையில் மலர்கள் அழகுடையதாய்த் தோன்றியது.
2. திருக்குறளில் உள்ள ஒவ்வொரு குறள்களும் அறிவூட்டுவனவாய் இருந்தன.
3. செடியின் இலைகள் ஒவ்வொன்றும் வாடின.
4. சில மாணவர் கல்வியிலே திறமை காட்டினர்
5. ஒரு பெண் மாலை தொடுத்தாள்.
6. பல தொழிலாளர் வேலை இழந்தனர்.
7. மனிதனோ வெருளியோ அங்கு தோன்றுபவர்.
8. காலையில் தேகப்பயிற்சி செய்வது எனது பழக்கம்.
9. ஒவ்வொரு மாணவரும் தன்தன் கடமையைச் செய்ய வேண்டும்.
10. பொய் சொல்வதும் களவெடுப்பதும் நல்ல பழக்கங்கள் அன்று.